## பத்திரிக்கை செய்தி

## பட்டாவில் பெயர் திருத்தம் செய்ய லஞ்சம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர் கைது

புகார்தாரர் திருமதி.எல்லம்மாள், காஞ்சிபுரம் மாவட்டம் கோவூர் கிராமத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் தந்தை புலிவாய் கிராமம், வந்தவாசி தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டத்தில் தனக்கு சொந்தமான நிலத்தினை புகார்தாரருக்கும் அவருடைய தங்கைக்கும் பாகப்பிரிவினையாக பிரித்து கடந்த 2008ம் ஆண்டு வந்தவாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார். இதில் புகார்தாரருக்கு 27 சென்ட் நிலத்திற்கான பட்டா எண்.490 நில உரிமையாளரான புகார்தாரர் பெயரில் இருந்து வந்தது. தற்போது பட்டா எண்.503ல் நில உரிமையாளர் பெயர் தங்களுக்கு சம்பந்தமில்லாத திருமதி.உண்ணாமலை என்பவரின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, இதனை கண்ட புகார்தாரர் 19.09.2022ம் தேதி வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் தவறான முறையில் பட்டா பெயர் மாற்றம் செய்ததை ரத்து செய்து தனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். திரு.தனபால், கிராம நிர்வாக அதிகாரி, தென்னாங்கூர், வந்தவாசி தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் தொலைபேசியில் புகார்தாரரை 29.12.2022 தொடர்பு கொண்டு விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க தனக்கு ரூ.25,000/- தனக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். தன்னால் அவ்வளவு லஞ்சம் கொடுக்க இயலாது என்று புகார்தாரர் கூறியதற்கு, இந்த பணம் தனக்கு மட்டுமல்ல மற்ற அதிகாரிகளுக்கும் கொடுப்பதற்குதான் என கிராம நிர்வாக அதிகாரி கூறியுள்ளார். பின்னர் அன்று மாலை புகார்தாரர் கிராம நிர்வாக அதிகாரியை அலுவலகத்தில் நேரில் சந்தித்து தன்னால் லஞ்சம் கொடுக்க இயலாது மிகவும் கஷ்டமாக உள்ளது கூறியுள்ளார். அதற்கு கிராம நிர்வாக அதிகாரியான திரு.தனபால் லஞ்சம் கொடுத்தால் மட்டும் தான் உங்கள் வேலையை முடித்து தருவேன் என்று கூறியுள்ளார். எனவே லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை திருவண்ணாமலை பிரிவில் புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 30.12.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கிராம நிர்வாக அலுவலர் திரு.தனபால் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.25,000/- கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## VAO ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE FOR NAME CORRECTION IN PATTA

The complainant Tmt.Ellammal, is residing at Koovur Village, Kanchipuram District. The complainant father had settled his lands at Pulivai Village, Vandavasi Taluk, Tiruvannamalai District through dhana settlement to the complainant and her sister and which have been registered at Sub Registrar Office, Vandavasi Taluk in the year 2008, and had been obtained in the complainant name. In the month of 09/2022 the patta had been changed in the name of one Tmt.Unnamalai, who is not related to them. Hence the complainant had applied name correction in patta at Vandavasi Taluk Office, Kanchipuram District, for which Tr.Dhanapal, Village Administrative Officer, Vandavasi Taluk, demanded Rs.25,000/- as bribe money for processing her application. The complainant had pleaded that she cannot give so much amount of bribe but the VAO insisted to give bribe stating that the bribe money has to be given to other officers also. The same day evening the complainant had met the VAO and again pleaded that she cannot give so much bribe. But the VAO refused saying that only if she gives bribe her work will be completed. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tiruvannamalai detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today 30.12.2022, Tr. Dhanabal, Village Administrative Officer, reiterated the bribe amount of Rs.25,000/- from the complainant. The accused was arrested.